JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-2 Witness
for Prosecution

| CC.No. | 418/2025 | Crime No. | 23/2025 | Station | Appakodal |
|---|---|---|---|---|---|

| Name | PW.2– சந்திரசேகர் | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 25.03.2026 | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணியாற்றி, பணி ஓய்வு பெற்று தற்போது கோபியில் வசித்து வருகிறேன். நான் ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடந்த 19.01.2025 தேதியன்று என்னுடன் காவலர்கள் நாகராஜன் மற்றும் ஹரீஷ் ஆகியோர்களை அழைத்துக் கொண்டு ஆப்பக்கூடல் காவல் நிலைய சரகத்தில் மதுவிலக்கு சம்பந்தமான குற்றங்களை தடுக்கும் பொருட்டு ரோந்து பணியில் ஈடுபட்டு இருந்தபொழுது எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பெயரில் தளவாய்பேட்டை, பூரணி சிக்கன் கடை அருகே உள்ள முப்புதரில் கண்காணித்தபோது அங்கு சந்தேகப்படும்படி கையில் பையுடன் நின்றிருந்த ஆஜர் எதிரி எங்களை பார்த்தவுடன் ஓட முயன்றவரை சுற்றி பிடித்து அவர் கையில் வைத்திருந்த பையை சோதனை செய்தபோது பையில் சுமார் 180 ML அளவுள்ள EXPRESS BRANDY பாட்டில்கள் 8 இருந்தது. அவரை விசாரித்தபோது அவரது பெயர் ஆறுமுகம் என்றும் அவர் முகவரியையும் கூறினார். தான் அரசு மதுபானங்களை வாங்கி தனது சுய லாபம் கருதி அதிக விலைக்கு விற்று வருவதாக கூறி, அரசு அனுமதியின்றி மேற்படி பாட்டில்களை விற்பனைக்கு வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்ட வரை கைதுக்கான காரணம் கூறி அன்றைய தினம் காலை 08:30 மணிக்கு கைது செய்தும், பொது மக்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன் வராததால் என்னுடன் வந்த காவலர்கள் முன்னிலையில் அன்றைய தினம் காலை 08.45 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் மூலம் எதிரி எடுத்து ஆஜர் செய்த பிராந்தி பாட்டில்கள் 8 ஐ கைப்பற்றினேன்.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.25 18:52:56 +0530

பின்னர் கைது செய்த எதிரி மற்றும் கைப்பற்றிய வழக்கு சொத்துடன் நிலையும் வந்து நிலைய குற்ற எண்.23/2025, சட்டப்பிரிவுகள் 4(1)(a) TNP ACT கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கைது செய்த எதிரிக்கு திரேக பரிசோதனை செய்து தக்க நிலைய பிணையில் விடுவித்தேன். பின்னர் கைப்பற்றிய வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **படிவம் 91 அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் என்னுடன் வந்த காவலர்கள் இருவரையும் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து அன்றைய தினமே 19.01.2025-ம் தேதியன்று எதிரி மீது பட்டப் பிரிவுகள் 4(1)(a) TNP ACT கீழ் இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்த கைப்பற்றுதல் மகசரில் குற்ற எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். வழக்கு சொத்தை 1 மாதம் கழித்து இந்த நீதிமன்றத்தில் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். இந்த வழக்கின் புகார்தாரர் மற்றும் புலன் விசாரணை அதிகாரி நான்தான் என்றால், சரிதான் இந்த வழக்கில் பார்வை மக மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். பொது ஜன சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால், சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்வது போல், சொன்ன நேரத்தில் சொன்ன, விதத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், எதிரியிடமிருந்து எந்த ஒரு ஆவணமும் கைப்பற்றவில்லை என்றாலும், புள்ளிவிவர கணக்கிற்கு போடப்பட்ட வழக்கிற்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court

readover to the witness in the presence

of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.25 18:53:03 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani